சாயிராம்



குப்பிளான் வடக்கு, காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும்
ஊரெழு கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்
# திருமதி மனோன்மணி பரராஜசிங்கம்

அவர்களின் சிவப்பேறு குறித்த


# மனோன்மணீயம்

20.10.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சாயிராம்



குப்பிளான் வடக்கு காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும்
ஊரெழு கிழக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி மனோன்மணி பரராஜசிங்கம்

அவர்களின் சிவப்பேறு குறித்த

# மனோன்மணீயம்

**20.10.2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



எங்களின் வாழ்விற்கும், வளர்ச்சிக்கும்

மெழுகுவர்த்தியாக இருந்து

தன்னையே உருக்கி ஒளியூட்டிய

எங்களின் ஆருயிர் தெய்வத்தின்

இனிய நினைவுகளை எங்கள்

இதயமதில் நிதம் சுமந்து

மனோன்மணீயம் எனும் மலரை அவர்தம்

மலரடிகளிற்கு

காணிக்கையாக்குகின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சாயிராம்



தோற்றம்
17.01.1935

மறைவு
24.09.2010

# அமரர்

# திருமதி மனோன்மணி பரராஜசிங்கம்

அவர்கள்

## திதி வெண்பா

ஆண்டு விகிர்தி அபர புரட்டாதி
பூண்ட பிரதமைத் திதியாகும் – ஈண்டு
மனோன்மணி மாதவள் மாநடமாடு தில்லைத்
தேன்பொந்தைச் சேர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## தேவாரம்

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றேநீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே.

## திருவாசகம்

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறெனக்குண்டோ எண்டோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ
இதற்கு நாயகமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத் தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்துங் குடிகுடிஈசற்காட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம் கும்பிடப்பெற்று
மண்ணிலே வந்தபிறவியே எனக்கு வாலிதாம் இன்பம் ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவி நீர் சொரியக் கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற்குருவாகி
பிறவாகித் தரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆழ்வார் பாடல்

பச்சை மாமலைபோல் மேனி
பவளமாய் கமலச் செங்கண்

அச்சுதா அமரரேறே
ஆயர் தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிரயான் போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர்புவஸ்ஸுவ(கா)

தத்ஸவிதுர் வரேண்யம்

பர்கோதேவஸ்ய தீமஹி

தியோ யோநஃ ப்ரசோதயாத்(து)

சமஸ்த லோகா சுகினோ பவந்து

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி மனோன்மணி பரராஜசிங்கம் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

திருமூலநாயனாரினால் சிவபூமி எனப் புகழப்பட்ட ஈழமணித் திருநாட்டின் சிரசாக விளங்குவது யாழ்ப்பாணக் குடாநாடு. அங்கே உள்ள பல கிராமங்களில் ஒன்றான, செம்மண் நில வளமும், சுவைமிகு நீர்வளமும் நனிசொட்டும் பழமரங்களும், மலர்சோலைகளும் நிறைந்த குப்பிளான் கிராமத்தில் சைவம் தழைத்தோங்கி நிற்பதை அங்குள்ள ஆலயங்களும் மக்களின் வாழ்க்கை முறையும், அங்கு வாழ்ந்து மறைந்த பெரியோர்களின் வாழ்க்கையும் சான்று பகர்கின்றன. இதற்கமைய இக்கிராமத்தின் வடக்கில் அமைந்துள்ள காளி கோவிலிற்கு அண்மையில் அங்குள்ள தேவியின் அருள்பெற்ற “கணிதமேதை” எனப் புகழப்பெற்ற கதிரிப்பிள்ளை ஆசிரியர் - நல்லம்மா தம்பதியினரின் மூத்த மகளாக மனோன்மணி அவர்கள் 17.01.1935இல் பிறந்தார். இவர் தமது தாய், தந்தையர் போல இறைபக்தி நிறைந்தவர். இவருக்கு தங்கவேல் (கனடா) என்ற ஒரு அன்பான ஆண் சகோதரரும், புனிதவதி (கனடா), ஞானமிர்தம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சிவயோகம் (ஊரெழு கணேச வித்தியாசாலை ஆசிரியர்), குணபூஷணம் (புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர்) என்ற நான்கு அன்பான சகோதரிகளும் உளர்.

மனோன்மணி அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை இராமநாதன் கல்லூரியிலும் பயின்றார். தந்தையின் பேரன்பிற்குப் பாத்திரமான இவர் தனது 22 வயதில் தந்தையை இழந்தார். இதன் பின் கல்வியைத் தொடரமுடியாது போய் விட்டது. எனவே பெரியோர்கள் நெல்லியடியைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லையா தம்பதியினரின் 3ஆவது மகனான பரராஜசிங்கத்திற்கு 1965இல் திருமணம் செய்து வைத்தனர். இதனால் தருமலிங்கம், சுப்பிரமணியம், பரமேஸ்வரி ஆகியோரிற்கு மைத்துனியானார். இதேபோன்று தமது சகோதரர்களின் திருமணத்தினூடாக தனலட்சுமி, செல்வநாயகம், கணேசலிங்கம், பேரின்ப பாலசுப்பிரமணியராஜா, வைத்தியநாதன் ஆகியோரின் மைத்துனியானார். ரமணா, கணாதீபன், குகதர்சன் ஆகியோரின் பாசமிகு மாமியாகவும், மதிவதனி, சற்சொரூபன், நந்தினி, கஜேந்திரன், யதீஸ், ஜீவினி, கபிலேசன், சிந்துஜன் என்போரின் பாசமிகு பெரியம்மாவாகவும் விளங்கினார். இத்துடன் இவர் தனது தாயின் சகோதரர்களான குமாரசாமி, சுப்பிரமணியம், இரத்தினம்மா, கனகம்மா, பூமணி ஆகியோர் மீதும் அவர்களது பிள்ளைகள் மீதும் அளவற்ற அன்பு கொண்டிருந்தார்.

1989இல் கணவனை இழந்தார். அதன்பின் நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தால் இடம்பெயர்ந்து இளைய சகோதரியுடனும், தனது தாயுடனும் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வந்தார். அந்நேரத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த தாயையும் குறைவிடாது நன்கு பராமரித்து வந்தார். 1996இல் தாயையும் இழந்து மிகுந்த வேதனையுற்றார். மீண்டும் ஊரெழுவில் 16 வருடங்களாக இளைய சகோதரியின் குடும்பத்தோடு வாழ்ந்து வந்தார். எந்த இக்கட்டான நேரத்திலும் இறைவழிபாட்டை தவறாது மேற்கொண்டார். இடப்பெயர்வின்போது தான் புகுந்த இடத்தில் ஏனைய உறவுகளையும் தங்கி வாழ வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். அயலவர்களோடும் உறவுகளோடும் அன்பாக வாழ்ந்திருக்கிறார் என்பதை அவர்களின் வார்த்தைகளே சான்றுபகர்கின்றன.

இவர் இளமையிலிருந்தே தாய் தந்தையர் போல இறை வணக்கத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவர். இவர் சகல விரதங்களையும் அனுஷ்டித்து வாழ்ந்தவர். வீட்டிலும் சரி, ஆலயங்களிலும் சரி பண்ணோடும் பக்தியோடும் தேவார திருவாசகங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பாடுவார். முருகனிடத்திலும், சாயிபாபா விடத்திலும் மிகுந்த பற்றுக் கொண்டவர். ஊரிலுள்ள கோவில் திருவிழாக் களில் மட்டுமல்ல, ஏனைய தொலைதூர ஆலயங்களிற்கும் விசேட காலங்களில் சென்று வணங்குவதை வழக்கமாகக் கொண்டவர். இந்தியாவிற்குச் சென்று பல ஆலயங்களையும் தரிசித்து வரவேண்டும் என்ற நீள் கனவை 2004ஆம் ஆண்டு நிறைவேற்றிக் கொண்டார். தனது அன்புச் சகோதரனுடன் மதுரை மீனாட்சி, காசி, ஆறுபடை வீடுகள், திருவண்ணாமலை முதலிய இந்திய ஆலயங்கள் பலவற்றிற்கும் சென்று வணங்கிய தோடு, புட்டபர்த்திக்குச் சென்று பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அற்புதத் தரிசனத்தையும் பெற்றுக் கொண்டார். ஊரில் சாயிபாபாவின் பஜனை பூசைகளிலும் தன்னை முழுமை யாக ஈடுபடுத்திக்கொண்டார். இறைவனிடத்தில் அளவில்லா அன்பு கொண்ட இவர் தேவார, திருவாசகங்களை சிவபுரா ணத்தை நாள்தோறும் தவறாது ஓதுவார். தன்னுடைய இறுதி நாள்வரை பூவும், நீரும் கொண்டு இறைவனை ஆராதித்து வாழ்ந்தவர். நீரிழிவு நோயினால் உடல் பாதிக்கப்பட்டிருந்த போதும் தன் வழமையான கடமைகளைச் செய்வதில் இவர் தவறவில்லை.

நோயுற்று, வருந்தி, மனம்வாடி, பாயிற் படுத்து பரிதவிக் காமல் நிலையில்லா குரம்பையை விட்டு நீங்கிவிட வேண்டும் என்று இறைவனை வழிபட்டார். அதேபோல் திடீரென வியாழக்கிழமை நோயுற்று வெள்ளிக்கிழமை (24.09.2010) அன்று அதிகாலை 2.42 மணியளவில் எவரும் எதிர்பாராதவிதமாக தன் ஆருயிர்த்தந்தையின் திவசத்திதியன்றே உடல்நீக்கி தில்லைக் கூத்தனின் திருவடிகளை சென்றடைந்தார். அவரின் ஆத்மா எல்லாம்வல்ல இறைவனுடன் இரண்டறக் கலந்து சாந்தியுற நாமும் இறைஞ்சுவோமாக.

*ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்கள்

ஊரெங்கும் உலாவி வந்த

உயிர்ப்பறவை ஒன்று ஜகத்தில்

தன் குஞ்சுகளிற்கு ஏணியாக

ஏற்றமுடன் இருந்துவிட்டு

திடீரெனத்தன் குஞ்சுகளைத் தவிக்கவிட்டுச்

சென்றதுவோ – கனவுபோலும்

நம்பத் தான் முடியவில்லை, நாம் படும் வேதனையை

வடிக்க இவ் ஜகத்தில் வார்த்தையுமில்லை

அனுஅனுவாய் நிதம் கதிகலங்கித் துடிக்கின்றோம் ஒரு தூய

அன்பின் சகாப்தம் முடிவடைந்துவிட்டதென

சாந்தி பெறுக எல்லாம் வல்ல சத்திய

சாயிநாதனின் பாதார விந்தங்களில்.

இங்ஙனம்,
**உறவுகள்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாயி காயத்திரி மந்திரம்

**ஓம் சாயிஸ்வராய
வித்மஹி சத்ய
தேவாய தீமஹி
தன்னா ஸர்வ
பிரசோதயாத்**

# SAI GAAYATHREE

OM SAAYEESHVARAAYA
VIDHMAHE:SATHYA
DHEVAAYA DHEEMAHI
THANNAH SARVAH
PRACHODHAYAATH



“வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியுக அவதாரா – சாயிபாபா

யுகம் யுகமாக அவதரிக்கும் பரமாத்மா தற்போது கலியுகத்தில் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாவாக இந்தியாவின் ஆந்திர பிரதேசத்தில் அனந்தப்பூர் மாவட்டத்திலுள்ள புட்ட பர்த்தி எனும் குக்கிராமத்தில் அவதரித்துள்ளார். சுவாமியின் அவதாரத்தை இந்து சமயம் உட்பட பல்வேறு சமய நூல் களும், ஞானியரது நூல்களும் எதிர்வு கூறின. 5000 வருடத்திற்கு முன்னர் வாழ்ந்த சுகமுனிவர் தனது காண்டத் தில் சாயிசரித்திராமிர்தக்கிரந்தம் எனும் ஒரு பகுதியில் பகவான் அவதரிக்கும் வருடம், நட்சத்திரம், நாள், அவரின் சக்திகள், கல்விச்சேவை என்பன பற்றியும் அவர் ஒரு பூரண அவதார மெனவும் மிக விரிவாக எழுதியுள்ளார்.

சுவாமி தனது அவதார நோக்காக இன, சமய சார்பற்று "உலக மக்கள் அனைவரும் ஒரு கடவுளின் அன்புக் குழந்தைகள். நாம் அனைவரும் சகோதரர்கள் நம்முள்ளும் தெய்வீகம் உள்ளுறைகின்றது. இதை மறந்து வழிதவறி பயணிக்கும் மனித இனத்தை அன்பால் வழிநடத்தலை"க் கொண்டுள்ளார். இன்று நாம் அவதார காலத்திலே வாழ்ந்து கொண்டுள்ளோம். இந்த உண்மை பலருக்குத் தெரியாது. சிலர் நம்புவதில்லை. இத்தோற்றப்பாடு முன்னைய அவதாரங் களிலும் காணப்பட்டது. இலங்கையில் விபீஷணனை தவிர ஏனையோரிற்கு இராமனை அவதாரமாகவோ, கிருஷ்ணரை பஞ்சபாண்டவர் மற்றும் சிலரை தவிர ஏனையோருக்கு அவதார மாகவோ தெரியவில்லை. ஏன் ஜேசுபிரானைக்கூட இறைதூதர் என புரியாது சிலுவையில் அன்று அறைந்தார்கள். புத்த பெருமானைத் தெரியாது நடந்தனர். முகமது நபிபெருமானாரை மக்காவிலிருந்து மதீனா நகருக்கு கல்லை வீசி துரத்தினர். இன்று சாயி அவதாரம் ஒரு பூரண அவதாரமாக எமது வாழ்க்கைக் காலத்திலே நிகழ்கின்றது. இராமர், ஜேசு, புத்தர், கிருஷ்ணர்... வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த பாக்கிய வான்களைப் போல நாமும் உண்மையில் மிகுந்த பாக்கிய சாலிகள். சாயிபாபாவின் அற்புத அதிசயங்களால் ஈர்க்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அவரின் அன்பு நெறியில் ஆனந்தம் பெற வேண்டும். பகவானின் அற்புதங்களை பரிசோதிக்க முயன்ற கல்விமான்கள், விஞ்ஞானிகள், உளவியல் நிபுணர்கள் முடிவில் சுவாமியின் பாதநமஸ்காரம் வேண்டினர். சாயிபாபாவை கண்ணால் காணும் தரிசனமே போதும் என மந்திரிகள், உபவேந்தர்கள், மருத்துவ நிபுணர்கள், சாதாரண மக்கள் புட்டபர்த்தி சென்று ஆனந்த பரவசமுற்று புதுப்பொலிவுடன் உன்னத மனிதரா கின்றனர். நாமும் அன்றைய அவதாரத்தில் வாழ்ந்த துரதிஷ்ட சாலிகளைப் போலல்லாது தப்ப முடியாத உடலின் இறப்பினுள் பகவானை உணர்ந்து அன்பில் திளைத்து சேவையே எம் மூச்சாகக் கொண்டு வாழ்வோமாக.

ஓம் ஸ்ரீ சாயிராம்

## சுவாமியின் வேத வாக்கியம்

உலகிலுள்ளது ஒரே இனம் - அது மனிதஇனம்

உலகிலுள்ளது ஒரே சமயம் - அது அன்பெனும் சமயம்

உலகிலுள்ளது ஒரே மொழி – அது இருதயமொழி

உலகிலுள்ளது ஒரே கடவுள் - அவர் எங்கும் நிறைந்தவர்.

## சாயி காயத்திரி மந்திரம்

ஓம் சாயீஸ்வராய வித்மஹே

சத்ய தேவாய தீமஹி

தந்நஸ் ஸர்வப்ரசோதயாத்(து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவானின் அறிவுரைகள்

- எல்லோரையும் நேசி எவரையும் புண்படுத்தாதே.
  (Love ever, hurt never)
- எல்லோரையும் நேசி, எல்லோரிற்கும் சேவை செய்.
  (Love all, Serve all)
- பிறரைப் பற்றி குறைகூறாதே.
- எவரிற்கும் ஒருபோதும் துன்பம் செய்யாதே.
- எல்லோரிற்கும் எப்போதும் உதவி செய்.
- மனிதன் + ஆசை = மிருகம்
  மனிதன் - ஆசை = கடவுள்
- மறுபடி பிறக்காமலிருக்க என்ன செய்யவேண்டுமோ, அதைச் செய்து முடித்துக் கொள்வதற்காகத் தான் நாம் இப்பிறவி எடுத்திருப்பது.
- ஐம்புலன்களிற்கும் நாமே எஜமானர், அவை நமக்கு எஜமானராகக் கூடாது.
- பிறரிற்கு உதவிசெய்ய எழும் துடிப்பு, நமது உடலின் நோய்களை விலக்குகின்றது.
- தாகத்திற்குப் பருகும் பானத்தை தமிழர் 'தண்ணீர் எனவும் சிங்களவர் வத்துறு எனவும், ஆங்கிலேயர் வோட்டர் (Water) எனவும் ஹிந்தியர் பாணி எனவும் அழைப்பது போல ஒரே கடவுளை பல நாமரூபங் களால் அழைக்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியதி

- பிறப்பு, வளர்ச்சி, முதிர்ச்சி இறப்பு இவையனைத்தும் இயற்கையின் நியதி.
- பொறுப்பு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவை யனைத்தும் நன் மனிதர் இயல்பு.
- அன்பு, கருணை, ஈய்வு, இரக்கம் இவையனைத்தும் பெரியோர் இயல்பு.
- தன்னம்பிக்கை, எச்சரிக்கை உணர்வு, விடாமுயற்சி, அனுபவ அறிவு இந் நான்கும் உடையோர் எப்போதும் வாழ்வில் வெற்றிபெறுதல் உறுதி.

# அறநெறி அமுதம்

01. மந்திரம் உடலைத் தூய்மையாக்குகிறது. இறைவனுடைய மந்திரத்தை உச்சரிப்பதால் மனிதன் தூய்மையடைகிறான்.
02. உன்னுடைய சொல், செயல் ஆகியவற்றில் உண்மையானவனாக இரு. நீ பேறுபெற்றவன் என்பதை உணர்வாய்.
03. இறைவனிடம் நாம் பூணும் அன்பின் ஆழத்தைப் பொறுத்தே நாம் இறைவனை அறிகின்றோம்.
04. இறைவனை அடைவதற்கு இதயம் கனிந்த உண்மையான பக்தியொன்றே தேவை.
05. தூய்மையான மனமுடையவர்கள் அனைத்தையுமே தூய்மையாக காண்கிறார்கள்.
06. அனைத்தும் மனதில்தான் இருக்கிறது. தூய்மை, தூய்மையின்மை இரண்டும் மனதில்தான் உள்ளது.
07. நல்லார் இணக்கத்தை வளர்த்துக் கொள். நல்லவனாக இருக்க முயற்சிசெய். காலக்கிரமத்தில் நீ வெற்றிபெறுவாய்.
08. பெற்ற தாய்க்கு சேவை செய்ய அனைவரும் கடமைப்பட்டவர்கள். அன்னைக்கு சேவை செய்வது உனது முதற்கடமை என்பதனை அறிந்து கொள்.
09. நற்கருமங்கள் எல்லாவற்றிலும் வெற்றி பெறுவதற்கு விடாப்பிடியும் விடாமுயற்சியும் அவசியமாகும்.
10. எவனொருவன் கடவுளை மட்டும் நேசிக்கிறானோ அவனே பாக்கியவான். இறைவனிடம் அன்பு செலுத்துவதால் துன்பமே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி அட்டவணை

*கதிரிப்பிள்ளை + *நல்லம்மா
- மனோன்மணி
- தங்கவேல் + தனலட்சுமி
  - ரமணா
  - கணாதீபன்
  - குகதர்சன்
- புனிதவதி + *செல்வநாயகம்
  - மதிவதனி
  - சற்சொரூபன்
  - நந்தினி
- ஞானாமிர்தம் + *கணேசலிங்கம்
  - கஜேந்திரன்
  - யதீஸ்
  - ஜீவினி
- சிவயோகம் + பேரின்பபால சுப்பிரமணியராஜா
  - கபிலேசன்
- குணபூஷணம் + வைத்தியநாதன்
  - சிந்துஜன்


*செல்லையா தம்பதிகள்
- தருமலிங்கம்
- சுப்பிரமணியம்
- *பரராஜசிங்கம் (மனோன்மணி)
- பரமேஸ்வரி

*அமரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



## எமது அன்புத் தெய்வம்

## அமரர் திருமதி மனோன்மணி பரராஜசிங்கம்

அவர்களின்

இழப்பைக் கேட்டு, நேரில் வருகை தந்து அனுதாப செய்திகளை தெரிவித்து, அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களிற்கும், உதவிகள் பல புரிந்த அனைவருக்கும், தொலைபேசி, கடிதம் மூலமாக ஆறுதல் கூறியோருக்கும், எமது துன்பத்தில் பங்கெடுத்தோருக்கும், இன்று நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், மேலும் இம்மலரை சிறப்புற வடிவமைத்த கஜன் பிறிண்டேஸிற்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

**சகோதரர்கள், மைத்துனர்கள்,**
**பெறாமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org